IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# மருத நில மக்களின் வாழ்வியல் பண்பாடுகள்

நெறியாளர்

**தெ.மேகநாதன்**

இணைப் பேராசிரியர்

தமிழியல் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலை நகர்

சிதம்பரம்

ஆய்வாளர்

**ஜா.சிவசங்கரி**

முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழியல் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலை நகர்

சிதம்பரம்

**முன்னுரை**

பண்பாடு என்பது மனிதனின் வாழ்க்கையோடும் வாழும் முறைமைகளோடும் தொடர்புடையதாகும். மனித இனம் மட்டுமே பண்பாட்டு இயல்புகளைக் கொண்டிருக்கிறது. மனிதன் மட்டுமே உறவு முறைகளின் அடிப்படையின் பண்பட்ட வாழ்க்கை முறைகளையும் சமுதாய ஒழுக்கலாறுகளையும் விதிமுறைகளையும் பின்பற்றி வாழ்ந்து வருகின்றான். (கந்தையாப் பிள்ளை, 2019; சுரேஷ், 2020). பண்பாடும் பண்பட்ட வாழ்க்கையும் நிலத்திற்கு நிலம் நாட்டிற்கு நாடு இனத்திற்கு இனம் அனைத்திற்கும் பொதுவாக அமைந்திருக்கும் ஒப்புமைக் கூறுகளைக் கொண்டு ஒரு நாட்டின் தேசியப் பண்பாட்டையும் உருவாக்க வேண்டியுள்ளது (தேன்மொழி, 2020). 'மருதநில வாழ்வியல் மரபுகளும் பண்பாடும்' என்னும் இவ்வியல் மருதநில மக்களின் பண்பாட்டையும் அப்பண்பாடு வழிப்பட்ட மக்கள் வாழ்க்கை முறைகளையும் ஆராய்வதாக அமைகின்றது.

**பண்பாடு விளக்கங்கள்**

“பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையதாகும் மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து பிரித்துக்காட்டி அவனை உயரியவனாகக் காட்டுவது பண்பாடே ஆகும். மனிதன் மட்டுமே பண்பட்ட வாழ்க்கையும் பண்பாட்டையும் கொண்டிருக்கிறான். மனிதர்களிடம் காணப்படும் பண்பாடு மிகவும் சிக்கலானதாகும். உயிரினங்கள் உடல்சார் கூறுகளுக்கும் பண்பாட்டுக் கூறுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. “பண்பாடு” என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் மனித சமூகம் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கின்றது.

பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் தனி மனிதர்களாலும் அனைத்து உட்குழுவினராலும் பகிர்ந்து கொள்ளப்படுவனவாக இருக்கும் அதனாலேயே “பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது என்றும் கற்றுணரப்பட்டது” என்றும் வரையறுக்கப்படுகிறது.

**மருதத்திணை மக்களின் பண்பாடு**

மருதத்திணை மக்களின் பண்பாடு வேளாண்மைத் தொழில் சார்ந்த பண்பாடாகும். உழவுத்தொழிலை முதன்மைத் தொழிலாக கொண்டும் வயலும் வயல் சார்ந்த மருதநிலப் பகுதியில் மக்கள் எத்தகைய ஒழுக்கலாறுகளைப் பின்பற்றி வாழ முடியுமோ அதற்கேற்றவாறு வாழும் வாழ்க்கை முறையையும் கொண்டதே மருதத்திணை மக்களின் அகப் பண்பாட்டியலில் தலைவனின் பரந்தமையொழுக்கம் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

**தலைவியின் பூப்பு விழா**

குறுந்தொகைப் பாடலில் அள்ளூர் நன்முல்லையார் பாடிய மருததிணைப் பாடலில் தலைவியின் பூப்பு விழாவினைப் பற்றி

‘குக்கூ’ என்றது கோழி; அதன் எதிர்
துட்கென் றன்றுஎன் தூஉ நெஞ்சம்
தோள்நோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (நாகராஜன், 2004). இப்பாடலில் வருகின்றன ‘வை’ ‘கறை’ என்ற சொல்லினை வைகறை எனப் பிரிந்து வைதற்கு உரிய பூப்பு எனப்

பொருள் கொண்டுள்ளார் இரா.இராகவையங்கர். தோளைத் தழுவிய தலைவன் தலைவியரைப் பிரிக்கின்ற வாள் போன்ற தாகலின் 'பூப்பு' வையப்படுத்தாயிற்று. தலைவி பூப்புத் தோன்றியமையினை 'வைகறை வந்தன்று' எனக் குறிக்கப்படுகின்றது. வைகறைப் பொழுதினில் வைதற்குரிய கரை வந்தது எனப் பொருள். மனையுறை கோழி, தூய்மையல்லாததை உணர்த்த வல்லது எனச் சுக்கிர நீதி என்று நூலும் கூறுகிறது. மனையுறை கோழி, என்றும் இயம்பும் மான்குரலில் இயம்பாது. இதனில் வேறுபட்டு 'குக்கூ' என வேறுபட்டுக் கூவியதாகவும், விடியலின் வருகையினை வைத்துக் கூறி இருப்பதாக அமைந்துள்ளது. கோழியினைச் சபிக்காமல் வாள் வந்திருந்த பூப்பினைத் தலைவி புலந்து கூறுகின்றார். நச்சினார்க்கினியாரும், "முந்நாளைப் பிரிவாகிய பூப்பிடைப் பிரிவு" எனப் பாடலினை மேற்கோள் காட்டியிருக்கிறார். வைகறை என்ற சொல்லிற்கு 'வைதற்கு' உரிய பூப்பு எனப் பொருள்.

**திருமணத்தில் தீயினை வலம் வருதல், திருமண முழவொலி**

திருமணத்தில் தீயினை வலம் வருதல் திருமண முழவொலி ஆகிய தமிழ்ப் பண்பாடு சார்ந்த தகவல்கள் மருதக்கலி பாடல்களில் பதிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"காதல்கொள், வதுவை நாள், கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மான் நோக்கின் மடந்தைதன் துணையாக
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்"

என்பது அப்பாடலடிகளாகும் (பாலசுப்பிரமணியன், 2004). "காதலித்த தலைவனும் தலைவியும் கொள்கின்ற திருமண நாளில், மேலாடைக்குள் நாளும் ஒடுங்கி நோக்குகின்ற மான் போன்ற நோக்கினையுடைய மணப்பெண்ணுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் துணையாய் உடன் வருவதற்கு வேதம் ஓதும் தொழில் புரியும் சிறப்புடைய அந்தணன் வழிகாட்ட மணமக்கள் தீவலம் வருவர்" என்பது இப்பாடலடிகளின் பொருளாகும்.

தலைவன் பரத்தையரை மணந்து கொண்டு இல்லறம் நடத்தியதாக ஏனைய சங்க அக நூல்களில் செய்திகள் இல்லை. ஆனால் மருதக்கலிப் பாடலொன்றில் மட்டும் தலைவன் நாள்தோறும் மணம் செய்யும் பரத்தையர் மனைக்கடைத்தே வந்து

தலைவியின் சிறு உறக்கத்தையும் சிதைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பாடலடிகள் வருமாறு

" துணை மலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணட மனைத் ததும்பும்நின் மணமுடிவந்து எழுப்புமே"

(பாலசுப்பிரமணியன், 2004)

**திருமணம்**

திருமணம் தமிழ்ப் பண்பாட்டில் முதன்மையும் முக்கியத்துவமும் பெற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது (சசிவல்லி, 1995). ஐந்திணை இலக்கியத்தில் தோழியின் துணையில்லாமல் தலைவனும் தலைவியும் பகற்குறி இரவுக்குறிகளில் சந்தித்துக் களவொழுக்கம் கொள்ள முடியாது. தம்முட் புணர்ந்த களவுக் காதலர்கள் கற்பு வாழ்க்கையை மேற்கொள்வதற்கு வெளிப்படையாக மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதே தோழியின் உண்மையான பண்பாட்டு நோக்கமாகும். இதனைக் குறுந்தொகையின் நெய்தல் திணைப் பாடலொன்று

"கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
இனமீன் இருங்கழ் நீந்தி நீ நின்
நயனுமையின் வருதி இவள்தன்
………….
அஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே"

எனக் குறிப்பிடும் தோழி இளையவளாயினும் பொறுப்பை உணர்ந்தவளாகச் சிந்திக்கின்றாள். தலைவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு தலைவனை இடித்துரைக்கிறாள் (நாகராஜன், 2004).

இவன் மீது வைத்த அன்பில் முதலைகள் வழி மறைத்துக் கிடக்கும் கடற்கரையில் மீன் கூட்டம் துள்ளும் உப்பங்கழிகளை நீந்தி இரவென்றும் பாராமல் நீயோ வருகின்றாய் இவளோ நீ வரும் வழியின் கொடுமையை நினைத்துப் பார்த்துத் தன் பேதையமையால் கலங்குகின்றாள் நஞ்சு உண்ட இரட்டைக் குழந்தைகளுக்கு வருந்துவது போல காமங் கொண்ட தலைவனுக்கும் தலைவிக்கும் தோழி வருந்துகின்றாள்.

“திருமணம் தவிர்க்க முடியாதது இன்றியமையாதது இதனைப் புரிந்து கொள்வோமேயானால் நயமும் பொருத்தமும் உடையதாக திருமணத்தைச் செய்ய முற்படுவோம்” தூயது களவுக் காதலர் மனமாசற்றவர் மணந்து கொள்ளும் உள்ளத்தினர் தோழி களவொழுக்கத்தின் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கும் 882 களவுப் பாடல்களில் சரிபாதி வரைவுத் துறைப் பாடல்களாக அமைந்திருப்பதற்கும் தமிழர்களின் திருமணம் பண்பாட்டுக் கொள்கை காரணமாகும்

“மன்றல் வேண்டினும் பெறுகுவை; ஒன்றோ
இன்றுதலையாக வாரல்”

என்னும் அகநானூற்றுப் பாடல் வரிகளும் தோழி தலைவனிடம் செய்து கொள்க. இரவுக்குறியில் வராதே எனக் கடுமையாக எச்சரிப்பதும் காணத்தக்கதாகும் (அண்ணாமலை, 2007). திருமணத்திற்கு கரண வழக்கு இன்றியமையாதது என்பது தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே உணரப்பட்டது. எனினும் கரணக்குறி அல்லது திருமணச் சடங்கு அடையாளம் காலந்தோறும் தமிழகத்தில் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

கன்னிக் கழிவுக்குச் சிலம்பு கழிவு வேண்டப்படும். எனவே திருமணத்தில் “சிலம்பு கழ் நோன்பு” ஒரு கணைமாயிற்ற சடங்கு முறையாயிற்று. அது சங்க காலச் சமுதாயத்தின் பொது வழக்கமாகும். தலைவனும் தலைவியும் உடன் போக்கு மேற்கொண்ட போது உறவினர் இல்லாத புதியதோர் நாட்டில் மணம் செய்து கொண்டாலும் ஆண்டு “சிலம்பு கழி நோன்பு” என்ற சடங்கு நிகழும்.

“உள்ளது கனிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்ச்
சிறுவன் கண்ணி சிலம்பு கழிஈய
அறியாத் தே எத்தாள் ஆடுதல் கொடியதே”

என்னும் அகநானூற்றுப் பாலைத் திணைப் பாடலில் தன் மகள் சென்ற நாட்டில் சிலம்பைக் கழித்தல் விழா நடைபெறுவதால் மிகக் கொடியது என ஒரு தாய் சினக்கிறாள் (அண்ணாமலை, 2007). “சிலம்பு கழித்தல் விழா”வை ஒரு செல்வம் என்றும் அதனைக் காணும் பேற்றை ஈன்ற தாய்க்கு அளிக்காமல் போய்விட்டாள் என்றும் மற்றொரு தாய் மனதிற்குள் அழுகிறாள் அப்பாடலடிகள் வருமாறு

“சிலம்பு கழீஇய செல்வம்

பிறருணக் கழிந்தவெண் ணாயிழை யடியே”

(பாலசுப்பிரமணியன், 2004).

“கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்துடன் போகிய காலையான”

என்னும் திருமண விதிமுறை தொல்காப்பியர் காலத்தில் இருந்த வழக்கு என்பதனையும் அவ்வழக்கின் உட்பொருளையும் மேற்குறித்த பாடல் சான்றுகளால் அறிய முடிகின்றது (பாலசுப்பிரமணியன், 2019).

**பூவணிச் சடங்கு**

திருமணமாகாத கன்னியர் முல்லைப் பூவணியும் உரிமையைத் திருமண நாள் முதல் பெறுகின்றனர். இவள் இல்லறத்தி “மனைவியானவள்” என்பதாற்குப் பூக்காரணம் செய்யப்படுவது அன்றைய சமுதாய வழக்காறு இக்காரணத்தைத் தலைவனே செய்வான் செந்நிற வேங்கை பூவின் மேல் இருந்த மயில் நகையணிந்த பெண் போலக் காட்சியளிக்கும் நாட்டவளே! நல்லது செய்தாய் நின் குடும்பம் வாழ்க என்பதனை!

“எரிமருள் வேங்கை யிருந்த தோகை

இழையணி மடந்தையில் தோன்றும் நாட

இனிது செய் தனையில் நுந்தை வாழியர்

துன்மனை வதுவை அயிரவிவள் பின்னிருங் கூந்தல்

- மலரணிந்தோயே

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம் (சிங்கார வடிவேலன், 2005).

**திருமண முறைகள்**

சங்க இலக்கியப் புலவரான நல்லாவூர்க் கிழார் சங்ககாலத் திருமணத்தின் முறைகளைப் பற்றி தனது ஒரே ஒரு அகநானூற்றுப் பாடல் மூலம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். இப்பாடல் மருதத்திணைப் பாடலாகும். மகப்பேற்றினைப் பெற்றுத் தாய்மையடைந்துள்ள இல்லறப் பெண்கள் நால்வர் ஒன்றுக்கூடி, ‘கற்பு வாழாமல் அறம் பல செய்க’ என்றும் ‘கொண்டானைப் பேணி ஒழுகுக’ என்றும், ‘தக்கவாழ்க்கைத் துணையாகுக’ என்றும் கூறித் திருமணம் நடைபெறும் போது மனப்பெண்ணினை வாழ்த்தி மகிழ்வர். மணப்பெண்ணின் கூந்தலில் பூவினையும், பிற மங்கலப்

பொருள்களையும் இட்டு நன் மணம் நிகழ்த்துவார்கள். இப்பாடல் மணச் சடங்கினை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது.

“புதல்வற் பயந்த நிதலை அவ்வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடி
……………… ………………. …………. …………
கல்லென் கம்மையர் ஞெரேரெனப் புகுதந்து,
‘பேர்இல் கிழத்தி ஆக’, எனத் தமர்தர”

அகநானூற்றின் மருதப் பாடல்கள் அனைத்தும் அக்காலத்தின் திருமணச் சடங்கின் முறைகளைப் பற்றியே அமைந்துள்ளது (அண்ணாமலை, 2007). திங்களும் உரோகிணியும் கூடுகின்ற நாள் திருமணத்திற்குச் சிறந்த நாள் எனக் கருதுகின்றனர். அகநானூற்றின் மற்றொரு மருதப் பாடலில் விற்றூற்று மூதெயினனார்,

“அம்கண் இருவிசும்பு விளங்க, திங்கள்
சகடம் மண்டிய துகள்நீர் கூட்டத்து,
கடிநகர் புனைந்து, கடவுட் பேணி,
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ”

இப்பாடலில் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது (அண்ணாமலை, 2007). உரோகிணியுடன் சந்திரன் உச்சன் ஆகலின் எவ்வகையிலும் எத்தீங்கும் நீங்கும் என்று மருத மக்கள் கருதினர். பழந்தமிழ் மக்கள் திருமணத்தன்று வீட்டிற்கு முன்பு வரியாகக் கால்களை நட்டு வைத்து பந்தலிட்டும், பந்தலுக்குக் கீழே மணலைப் பரப்பியும், மனையில் மனை விளக்கினை ஏற்றியும் மாலைகளையும் தொங்க விட்டனர் என்பதனை இப்பாடலின் மூலம் அறியலாம். இடையறாது உளுந்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவான வெந்த பொங்கலோடு பெருஞ்சோற்றுத் திரளை அளித்தனர்.

வயது முதியவர்கள் இத்திருமணத்தைச் செய்து வைத்தனர். புதல்வர்களைப் பெற்றெடுத்த மங்கலப் பெண்கள் நால்வர் கூடி “கற்பினின்றும் வழாது தற்காத்துத் தற்கொண்டானைப் பேணும் தகைச் சிறந்தாள் ஆகுக” என வாழ்த்தினார்கள்.

அகநானூற்றின் 136-வது பாடல் வரிகளில் மைப்பறப்புருக்கின் நெய்கனி வெண்சோறும் படைக்கப்பட்டு பெரியோர்களின் மணமக்களை வாழ்த்தினர்.

தலைவிக்குப் புதியதொரு புத்தாடைகளை அணியச் செய்து கட்டியக் காப்பு அணிவிக்கப்பட்டது. இக்காப்பு வெண்ணிற நூலில் வாழை இலையையும், அருகம்புல்லையும் சேர்த்துக் கட்டியக் காப்பாகும். நீரோடும் நெல்லும் மலரும் கலந்து அதனை மணமகளின் கூந்தலில் தூவினார்கள். இம்முறைகளில் வதுவைச் சடங்கு நடைபெற்றதை இப்பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன.

அகநானூற்றுப் பாடலில் நெய்மிக்க வெண்சோற்றில் இறைச்சியைச் சேர்த்து சமைத்து உயர்ந்தோர்களை உண்ணச் செய்தனர். புள் நிமித்தம் பார்த்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. திங்களை உரோகிணி கூடிய நன்னாளில் மண் மனையினை நன்கு அழகுப்படுத்தினார்கள். கடவுளை வணங்கினர். உணவின் மணத்தினை அறிவிக்கும் பொருட்டு மணமுழவுடன் பெரிய முரசின் ஒலி முழங்க மகளிர் தலைவிக்கு நீராட்டி மகிழ்ந்தனர் என மணச் சடங்கு மூலம் அறியலாம். ஆனால் இந்த இரண்டு அகநானூற்றுப் பாடல்களில் மணமகன், மணமகளுக்குத் 'தாலி' கட்டியதாகச் செய்தி குறிப்பிடப்படவில்லை. இப்பாடலில் திருமணத்தில் இருந்து தான் பெண்ணானவள் கூந்தலில் பூவினை அணிவர் எனக் குறிப்பினால் சான்றளிக்கப்படுகிறது.

> "சங்ககால மக்களின் திருமண முறைகள் தற்போது நிலவுகின்ற சமயச் சடங்குகள் எதுவும் இன்றி எளிமையாக நடத்தப்பட்டன. இது பண்டையத் தமிழர்களின் உள்ளப் பண்பாட்டினை உணர்த்துகிறது. தமிழர்கள் திருமணத்தின் போது புத்தாடைகளும், புது அணிகலன்களும், மலரும் மாலைகளும் சூடுகின்ற பழக்கம் உள்ளோர்களாகவும் திகழ்ந்த போதிலும் தாலி கச்சும் பழக்கம் பின்பற்றப்படவில்லை. தாலி கட்டும் பழக்கம் தமிழரது பண்பாட்டில் இல்லை என்பது சங்ககால நூலில் இருந்து அறியலாம். கி.பி.10 நூற்றாண்டுக்குப் பிறகு தான்" (மா.இராசமாணிக்கனார், தமிழர் திருமணத்தில் தாலி, ப.13) தாலியிடும் பழக்கம் தமிழர்களுக்கிடையே புகுந்ததாக இராசமாணிக்கனார் தன்னுடைய நூலான "தமிழர் திருமணத்தில் தாலி" குறிப்பிட்டுள்ளார்.
>
> இதற்கு மேலும் சிறப்புகளைச் சேர்க்க சிலப்பதிகாரத்தில் சங்ககாலத்தின் கடைப்பகுதியில் தமிழரது திருமணம் மாற்றமுற்றதனை அறிய முடிகிறது. "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட" என்ற வரியின் மூலம் மணமக்கள்

தீயினை வலம் வருதல், நகரங்களில் வாழ்கின்ற மக்கள் புகுமனை புகுதல் மூலம் செல்வவளம் பெற்றிருந்தனர் என்பதனை அறியலாம். திருமணச் சடங்குகளில் இடம்பெறக்கூடிய ஆரியச் சடங்குகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. இத்திருமண முறையினைத் தமிழர்கள் வியந்து கண்டு களித்தனர். இதனை விரிவாக கலித்தொகைப் பாடலில்

“காதல்கொள், வதுவை நாள், கலிங்கத்துள்ள ஒடுங்கிய
மாதர்கொள் மான் நோக்கின் மடந்தைதன் துணையாக,
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்”

மருதனிள நாகனார் சுட்டிக்காட்டுகிறார். ஆரியரின் பழக்கவழக்கங்கள் தமிழ் மக்களிடையே புகுந்தமையை இப்பாடலது வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம் (பாலசுப்பிரமணியன், 2004).

**பரிசுப் பொருள் அளித்தல்**

சங்க காலத்தில் தற்சமயங்களில் நிகழ்வது போல் மணமகன் மணப்பெண்ணுக்கு பரிசுப் பொருள்களைக் கொடுப்பது வழக்கமான ஒன்றாகி விட்டது. இப்பழக்கம் தொன்றுதொட்டே காணப்படுகின்ற வழக்கமாகும். இப்பரிசுப் பொருளினைச் சங்ககால இலக்கியங்களில் முலைவிலை, சிறுவளை விலை, பரியம், பாசிழை வலை எனப் பல்வகைப் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகிறது. இதனை,

“தாமரைக்கு இறைஞ்சும் தண்துறை ஊரன்
சிறுவளை விலைஎனப் பெருந்தேர் பண்ணிஎம்
முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே!” (பாலசுப்பிரமணியன், 2009).

**முடிவுரை**

பண்பாடு என்பதற்குச் சமூக மானுடவியல் வல்லுநர்கள் பல்வேறு விளக்கங்கள் மற்றும் வரையறைகளைத் தந்துள்ளர்கள். அவர்கள் கூறிய வரையறைகள் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன. சங்ககால மக்களின் அகப்புற வாழ்க்கையில் பண்பாடு பிணைந்து காணப்படுகிறது. மருதநிலம் சார்ந்த மக்களது பண்பாடுகள் வேளாண்மைத் தொழிலினை சார்ந்தே இருந்துள்ளது. வயல் சார்ந்த நிலப்பகுதியில் எத்தகு ஒழுக்கங்களைப் பின்பற்றி வாழ முடியுமோ அதைப் பின்பற்றி வாழ்ந்தனர். மருதநில மக்களின் அகப்பண்பாட்டில் தலைவனது பரத்தமை ஒழுக்கம்

கூறப்பட்டுள்ளது. இம்மக்களின் திருமண முறையையும், இல்வாழ்க்கையையும் சிறப்புடன் காண முடிகிறது. திருமணம் என்பது தமிழர்களது பண்பாட்டில் முக்கியமானதாகவும், முதன்மையானதாகவும் கருதப்பட்டு வருகிறது. அகநானூற்றின் மருதப் பாடல்கள் அக்காலத்தின் திருமணச் சடங்கு முறைகளைப் பற்றி கூறுகின்றன. திருமணச் சடங்குகளில் 'சிலம்பு கழி நோன்பு' முக்கியச் சடங்காக வழக்கத்தில் இருந்துள்ளமையை அறியமுடிகிறது. இவர்களது திருமண முறைகளில் தற்போது நிலவுகின்ற சமயச் சடங்குகள் இன்றி எளிமையாக நடைபெற்றுள்ளது. திருமணத்தின் போது புத்தாடை உடுத்துவதும் புது அணிகலன்களை அணிவதும் மலர்மாலை சூடுவதும் கூறப்பட்டுள்ளன. மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டியதாகச் செய்தி குறிப்பிடவில்லை. திருமணத்தின் போது அந்தணன் வழிகாட்ட தீயினை வலம் வருதல் கலித்தொகையில் சுட்டப்பட்டுள்ளது. சங்ககாலத்தின் கடைசிப் பகுதியில் தமிழரது திருமண முறை மாற்றம் பெற்றதை மருதக்கலி குறிப்பிடுகின்றது. ஆரியரின் பழக்கவழக்கங்கள் தமிழ் மக்களிடையே புகுந்தமை இவற்றின் வழி புலனாகின்றது.

**பார்வை நூல்கள்**

அண்ணாமலை, சுபா., (2007) அகநானூறு மூலமும் உரையும், கோவிலூர் மடாலயம், கோவிலூர், இந்தியா.

பாலசுப்பிரமணியன், கே.வி., (2004) கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா.

பாலசுப்பிரமணியன், கே.வி., (2009) நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா.

பாலசுப்பிரமணியன், கே.வி., (2019) தொல்காப்பியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா.

கந்தையாப் பிள்ளை, ந.சி., (2019) தமிழர் பண்பாடு, சீதை பதிப்பகம், சென்னை, இந்தியா.

நாகராஜன், வி., (2004) குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இந்தியா.

சசிவல்லி, வி.சி., (1995) தமிழர் திருமணம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா.

சிங்காரவடிவேலன், அர., (2005) ஐங்குறுநூறு மூலமும் உரையும், கோவிலூர் மடாலயம், கோவிலூர், இந்தியா.

சுரேஷ், ஆர்., (2020) தமிழகத்தில் சமயப் பண்பாட்டு மாற்றங்கள், இந்திய தமிழ் ஆய்விதழ் 1(4) 1 – 10.

https://doi.org/10.34256/ijot2041

தேன்மொழி, கி., (2020) சங்க இலக்கியத்தில் விருந்தோம்பலின் நோக்கும் போக்கும் ஓர் மீள்பார்வை, இந்திய தமிழ் ஆய்விதழ் 1(4) 1 – 10.

https://doi.org/10.34256/ijot2032